**கவனிக்க.**- 2026.06.19 ஆந் திகதிய 2494 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) தமிழ்மொழியில் பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2495 - 2026 ජූනි මස 26 වැනි සිකුරාදා - 2026.06.26

2495 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2038 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2053 |


**கவனிக்க.**- ஏற்றுமதிக் கமத்தொழில் ஊக்குவிப்பு (திருத்தம்) சட்டமூலம் 2026.06.19 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**கவனிக்க.**- பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தம்) சட்டமூலம் 2026.06.19 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, யூலை மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


2035 - B 82804 - (2026/06)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### முஸ்லிம் / மேலதிக முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி (தமிழ்) - அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாற்றும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும் அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழிமூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு பாடமாக கருதப்படல் வேண்டும். அந்த பாடப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அந்தப் பாடம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவுக்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர், (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி

மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, யூலை மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, யூன் 04.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| அம்பாறை | அட்டாளைச்சேனை | தைகாநகர் பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை |
| அம்பாறை | கல்முனை | கரவாகுபற்று கல்முனைக்குடி பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை |
| அம்பாறை | கல்முனை | கரவாகுபற்று அக்பர் மாதிரி கிராமம் பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை |
| அம்பாறை | பொத்துவில் | பொத்துவில் (பசறிச்சேனை) பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை |
| அம்பாறை | சம்மாந்துறை | சம்மாந்துறை 1, 2 பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை |
| அம்பாறை | கல்முனை | கரவாகுபற்று நற்பிட்டிமுனை பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை |

06-321

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழி மூலம் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாற்றும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும் அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழ் மொழிக்காக சிறப்பு சித்தி உள்ளடங்கலாக க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக்கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு I” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, யூலை மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்ட வணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, யூன் 04.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| அம்பாறை | அம்பாறை | அம்பாறை நகர பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை |

06-322

## நீதிச்சேவை ஆணைக்குழு

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் "காதி" பதவி வெற்றிடங்களுக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் காதி நீதிபதிகளை நியமித்தல் - 2026

கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் :

விண்ணப்பதாரி முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமனான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கம் உள்ளவராகவும் இருக்க வேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும் உள்ளவராகவும் விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற கால எல்லைக்கு நியமனம் செய்யப்படுவார்.

காதியாக நியமிக்கப்படுவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்டரீதியாக அவசியமாகும்.

காதி ஒருவருக்கு ரூபா 7,500.00 மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் ரூபா 6,250.00 கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய, விண்ணப்பங்கள் 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காதி" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

ஆனந்தி கனகரத்தினம்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 573,
புதுக்கடை,
கொழும்பு 12,
2026, யூன் 26.

### அட்டவணை

| | காதி நீதிமன்றம் | காதி நீதிமன்ற அதிகாரப் பகுதி |
|---|---|---|
| 01 | பேருவளை | களுத்துறை மாவட்டத்தின் பேருவலை பிரதேச செயலாளர் பிரிவு |
| 02 | போறா சமூகம் | இலங்கை போறா சமூகம் |
| 03 | மொணராகலை | மொணராகலை மாவட்டத்தின் மொணராகலை நீதிப்பிரிவு |
| 04 | நீர்கொழும்பு | கம்பஹா மாவட்டத்தின் நீர்கொழும்பு நீதிப்பிரிவு |
| 05 | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் மாவட்டத்தின் யாழ்ப்பாணம், பருத்தித்துறை மற்றும் ஊர்காவற்துறை நீதிப்பிரிவு |

மாதிரி விண்ணப்பப்படிவம்

1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கம் ஆகிய சட்டங்களினால் திருத்தப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115 இன்) கீழ் காதிப் பதவிக்கான விண்ணப்பப்படிவம்

காதிப்பிரிவு :

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :

(உதாரணம் : இப்ராஹிம், ஏ. எல். எம்.)

2. முழுப்பெயர் :

(உதாரணம் : ஆதம் லெப்பே மொஹமட் இப்ராஹிம்)

3. நிலையான வசிப்பிடம் :

4. அஞ்சல் முகவரி :

5. பிறந்த திகதி :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தி | தி | மா | மா | வ | வ | வ | வ |

6. வயது :

7. இனம் :

8. சமயம் :

9. தே. அ. அ. இல. :

10. தொலைபேசி இல. :

11. கல்வித் தகைமைகள் :

1. ------------------------------------------------------------------------------------------------
2. ------------------------------------------------------------------------------------------------
3. ------------------------------------------------------------------------------------------------
4. ------------------------------------------------------------------------------------------------
5. ------------------------------------------------------------------------------------------------

12. தொழில் தகைமைகள் :

1. ---------------------------------------------------------------
2. ---------------------------------------------------------------
3. ---------------------------------------------------------------
4. ---------------------------------------------------------------
5. ---------------------------------------------------------------

13. எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

14. இஸ்லாம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? : ஆம் இல்லை

15. விவாகமானவரா ? : ஆம் இல்லை

16. மனைவி உயிருடன் இருக்கின்றாரா? : ஆம் இல்லை

17. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) : | தி | தி | மா | மா | வ | வ | வ | வ |

| *முதல்* | *வரை* | *தொழில்* | *இடம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி : ரூபா

19. மாதாந்த வருமானம் : ரூபா

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம் : ரூபா

21. சென்ற 10 வருட காலப்பகுதியினுள் நீர் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீரா ? : ஆம் இல்லை

22. நீர் வருமான வரி செலுத்துமொருவரா ? : ஆம் இல்லை

23. உமக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதும் உள்ளதா? இருந்ததா ? : ஆம் இல்லை

24. நீதிமன்றங்களில் தண்டனை பெற்றிருப்பின் அது பற்றிய விபரங்கள் ? :

25. உம்மைப் பற்றி நன்கறிந்துள்ள, உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| | |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொலைபேசி இல. : | தொலைபேசி இல. : |
| தொழில் : | தொழில் : |
| உம்மையறிந்துள்ள காலப்பகுதி : | உம்மையறிந்துள்ள காலப்பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----------------

திகதி :-----------------. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

குறிப்பு.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

06-348

---

**இலங்கைப் பாராளுமன்றம்**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் டொகுதியில் காணப்படும் பின்வரும் பதவிகளுக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ்க் காணப்படும் மாதிரிப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கல்வித் தகைமை/ தொழில்சார் தகைமை மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026.07.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கின்ற பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். (மேலும் இந்த விளம்பரத்தினை www.parliament.lk எனும் இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்).

குறிப்பு: ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பிக்க வேண்டும்.

1. **குளிரூட்டி மற்றும் குளிர்சாதனத் தொழினுட்பவியலாளர் பதவி [வெற்றிடம் 01]**

1.1 **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25ஆந் திகதிய 04/2025ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 47,240.00- 9 x 540 - 10 x 590 - 3x680 – ரூபா 60,040.00 ஆகும் (சகல மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூ. 87,000.00 ஆகும்).

(மேற்படிச் சுற்றுநிருபத்திற்கு இணங்க 2027 ஆம் ஆண்டுக்கான சம்பளத் திருத்தங்களும் மேற் கொள்ளப்பட உள்ளன.)

1.2 **வயதெல்லை** :

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

1.3 **கல்வித் தகைமைகள்** :

கல்விப் பொதுத் தராதரச் (சாதாரணத் தர) பரீட்சையில் தமிழ் / சிங்கள மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலாக 06 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

1.4 **தொழில் தகைமை** :

வளிச்சீராக்கி மற்றும் குளிர்சாதனத் துறைச் சார்ந்த NVQ IV சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.5 **அனுபவம்** :

ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் குளிரூட்டி மற்றும் குளிர்சாதனத் துறையில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.6 **ஆட்சேர்ப்பு முறை** :

தொழில்சார் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

1.7 **பரீட்சை நடைமுறை :**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்படும் / தெரிவு செய்யப்பட்ட தொழில்

பயிற்சி நிறுவனமொன்றால் / மேற்பார்வைச் சபையொன்றால் நடாத்தப்படும் தொழில்சார் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப் படும்.

தேவையான அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே தொழில் சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், நேர்முகப் பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களுக்கமைவாக புள்ளிகள் வழங்கப் படும். இதற்காக வழங்கப்படும் மொத்தப் புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| *இல.* | *அளவுகோல்கள்* |
|---|---|
| 1 | மேலதிகக் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | சேவைச்சார்ந்த அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்கள் |

2. **தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் (சிவில்) பதவி - [வெற்றிடம் 05]**

2.1 **சம்பள அளவுத்திட்டம் :-**

2025.03.25 ஆந் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 42,290.00 - 9 x 490 - 10 x 540 - 6 x 590 - ரூபா 55,640.00 ஆகும் (சகல மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்தச் சம்பளம் அண்ணள வாக ரூ. 81,000.00 ஆகும்).

(மேற்படிச் சுற்றுநிருபத்திற்கு இணங்க 2027 ஆம் ஆண்டுக்கான சம்பளத் திருத்தங்களும் மேற்கொள் ளப்பட உள்ளன.)

2.2 **வயதெல்லை** :

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2.3 **கல்வித் தகைமைகள்** :

கல்விப் பொதுத் தராதரச் (சாதாரணத் தர) பரீட்சையில் தமிழ் / சிங்கள மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக 06 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(குறிப்பு – கட்டுமானத் துறையுடன் ஏற்புடையதாக NVQ III சான்றிதழைப் பெற்றிருப்பின், மேற் குறிப்பிட்டவாறு கல்விப் பொதுத்தராதரச்சான்றிதழ் பத்திரங்கள் (சாதாரணத் தரப்) பரீட்சையில் சித்தி பெற வேண்டியது கட்டாயமாகாது.)

2.4 **தொழில் தகைமை :**

தொழிற் பயிற்சி அதிகார சபை / தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்படும் தச்சன், கொற்றன் (மேசன்), குழாய் பொருத்துநர், ஈய ஒட்டுநர் (காய்ச்சி இணைப்போர்), வர்ணந்தீட்டுநர் போன்ற துறைகளுடன் ஏற்புடையதாக NVQ III சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

2.5 **அனுபவம்** :

அரசாங்க சேவையில் / அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் மேலே 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளுடன் தொடர்புடையதாக மூன்று வருடங் களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2.6 **ஆட்சேர்ப்பு முறை** :

தொழில்சார் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை யின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

2.7 **பரீட்சை நடைமுறை :**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக் கப்படும் மேற்பார்வைச் சபையொன்றால் நடாத்தப் படும் தொழில்சார் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

(அ) தொழில்சார் பரீட்சை

இதன்போது விண்ணப்பதாரியின் தொழில் நுட்ப அறிவு, தேர்ச்சி மற்றும் தேவையான திறன்கள் பரீட்சிக்கப்படும். பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

(ஆ) நேர்முகப் பரீட்சை

நேர்முகப் பரீட்சையின்போது கீழே குறிப் பிடப்படும் அளவுகோல்களுக்கேற்ப புள்ளிகள்

வழங்கப்படும். அதன்போது பெற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

| *இல.* | *அளவுகோல்கள்* |
|---|---|
| 1. | கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2. | விடய அறிவு |
| 3. | சேவைச்சார்ந்த அனுபவம் |
| 4. | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்கள் |

3. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும் :**

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையது. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்ப தாரர்கள் ஆரம்பத்தில் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாக நியமிக்கப்படுவார்கள். அரசாங்க சேவையிலோ அல்லது மாகாண அரசாங்க சேவையிலோ நிரந்தரமான ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றில் சேவையாற்றிய விண்ணப்பதாரரொருவர் அல்லது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒரு விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் ஒரு (01) வருட பதிற் கடமை காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்.

(ii) நியமிக்கப்படும் எண்ணிக்கையும் நியமனங்கள் செயல்வலுப் பெறும் திகதியும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பா திருக்க பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளு மன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங் கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற விகிதாசாரத்திற்கு அமைய விதவைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மருத் துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(vi) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக் கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

4. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தமது விண்ணப் பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன், மூலப் பிரதிகளைக் கோரும்பட்சத்தில் அவற்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி
(இ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றி தழ்கள்
(ஈ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(உ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

5. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தொடர் புடைய திணைக்கள / நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

6. பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் ஏதேனு மொரு வகையில் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகுதியின்மைக்கு வழிவகுக்கும்.

7. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்று ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் கண்டறியப்படுமிடத்து, அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படாத (தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் சேவை செய்பவராயின்) அல்லது பதவிக்கான மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் திணைக்கள/ நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

9. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் மொழிகளுக்கிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஹன்ச அபேரத்ன,
பதிற் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2026, யூன் 19.

**இலங்கைப் பராளுமன்றம்**

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**வெற்றிடங்கள் - 2026**

**---------------------------------------------------------------------- பதவி**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) : ......................................................................
(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) : ..............................................................................................
..........................................................................................
(இ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): (Mr./Mrs/Miss) .............................................

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3. (அ) (i) தனிப்பட்ட முகவரி :
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

(ii) மின்னஞ்சல் முகவரி : ..........................................................................

(iii) தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(iv) வட்ஸ்அப் இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ஆ) (i) அலுவலக முகவரி : ..................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

(ii) தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(இ) தயதுசெய்து அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரியைக் குறிப்பிடுக.

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

4. (அ) பிறந்த திகதி: ஆண்டு ............... மாதம்............... திகதி ...............
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது:
வருடங்கள் .............. மாதங்கள் ............நாட்கள்.................

5. சிவில் அந்தஸ்து (திருமணமானவர்/திருமணமாகாதவர்): ............................................................

6. பால் (ஆண்/பெண்) : ................................................

7. இலங்கைப் பிரசையா : (ஆம்/ இல்லை)

8. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *பரீட்சை* | *பாடம்* | *சித்தி* | *ஆண்டு* |
|---|---|---|---|
| க.பொ.த. (உ/த) | | | |
| | | | |
| | | | |
| | | | |
| க.பொ.த. (சா/த) | சிங்களம்/தமிழ் | | |
| | கணிதம் | | |
| | ஆங்கிலம் | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

9. தொழில்சார் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *பாடநெறி* | *நிறுவனம்* | *செயல்வலுப்பெறும் திகதி* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

10. ஏனைய தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

11. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *நிறுவனம்* | *பதவி* | *சேவைக் காலம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

12. தற்போதைய தொழில் பற்றிய விபரங்கள் (சம்பந்தப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)

(அ) நிறுவனத்தின் பெயர் : ..............................................................................
(ஆ) நிறுவனத்தின் முகவரி : ..............................................................................
(இ) முதல் நியமனத் திகதி : ..............................................................................
(ஈ) தற்போதைய பதவி : ..............................................................................
(உ) மாதாந்த அடிப்படைச் சம்பளம் : ..............................................................................
(ஊ) கொடுப்பனவுகள் : ..............................................................................
(எ) சராசரி சம்பளம் : ..............................................................................

13. நீங்கள் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? (ஆம்/இல்லை) அவ்வாறாயின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:

.......................................................................................................................................................................................

.......................................................................................................................................................................................

14. நீங்கள் இதற்கு முன்னர் அரசாங்க சேவையின் கீழ் பணியாற்றியுள்ளீர்களா? (ஆம் / இல்லை) ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடுக :

.......................................................................................................................................................................................

.......................................................................................................................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் பொய்யானது அல்லது தவறானது என நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்றும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நன்கறிவேன்.

திகதி: .................................. ..........................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**திணைக்களத் / நிறுவனத் தலைவரின் சிபாரிசு**

அரசாங்க /மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்த நிறுவனத்தில் ................................................................ பதவியை வகிக்கின்ற திரு / திருமதி / செல்வி ......................... ...................................................................... என்பவரின் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் இந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/நிரந்தமாக்கப்படவில்லை என சான்றுப்படுத்துகின்றேன். இவரின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் உறுதிசெய்கின்றேன். இவர் இந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவையிலிருந்து நிரந்தரமாக/தற்காலிகமாக விடுவிக்கப்படலாம் (பொருத்தமற்ற சொற்களைக் கீறிவிடுக).

திகதி : .................................... .............................................

திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்

அலுவலக முத்திரை

06-384

## பதவிகள் வெற்றிடங்கள்

## தகவலுக்கான உரிமை ஆணைக்குழு

## (2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது)

தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவில் வெற்றிட மாகவுள்ள கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு தகைமை யுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இப் பதவிகளுக்கு முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் சுற்றுநிருப இல. 01/2025 இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

01. **சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் (பதவி வெற்றிடம் 01) : தகைமைகள் : வெளியக விண்ணப்பதாரிகள் (கீழ் குறிப்பிடப்படும் 1 அல்லது 2)**

1. சமூகவியல், ஊடகவியல் அல்லது சட்டம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறப்பு இளங்கலைமாணிப் பட்டம்.

உடன்

சம்பந்தப்பட்ட துறையில் ஆய்வு தொடர்பான முதுமாணிப் பட்டம் (Masters) பெற்றிருத்தல்

மற்றும்

முதல் பட்டம் பெற்ற பின்னர், அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனம், சபையில், சட்டத்தால் உருவாக்கப் பட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறைந்தது எட்டு (08) வருடகால ஆய்வு அனுபவம் பெற்றிருத்தல்.

2. சமூகவியல், ஊடகவியல் அல்லது சட்டம் ஆகியவற்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட சிறப்பு இளங்கலை மாணிப் பட்டத்துடன், தொடர்புடைய துறையில் கலாநிதிப்பட்டம் (PhD)

மற்றும்

முதல் பட்டம் பெற்ற பின்னர், அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனம், சபையில், சட்டத்தால் உருவாக்கப்பட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப் பட்ட தனியார் நிறுவனத்தில் குறைந்தது ஐந்து (05) வருடகால ஆய்வு அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் : விண்ணப்பதாரிகள் (கீழ்க் குறிப்பிடப்படும் 1 அல்லது 2 அல்லது 3)**

1. மேற்குறிப்பிட்ட வெளியக விண்ணப்பதாரர் களுக்குரிய தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம், ஊடகவியல் அல்லது சமூகவியல் துறையில் சிறப்பு/பொது இளங்கலைமாணிப் பட்டம்

உடன்

சட்டம்/ ஊடகவியல் அல்லது சமூகவியல் துறையில் முதுமாணிப் பட்டமொன்றை (Masters) பெற்றிருத்தல்

மற்றும்

"கல்வி/ஊடகம்" துறையில் (AR 1) பதவிக்கு குறைந்தபட்சம் (08) வருட திருப்திகரமான சேவைக் காலமொன்றை பூர்த்தி செய்திருத்தல்.

உடன்

3. உரிய துறையில் சட்டம், ஊடகவியல் அல்லது சமூகவியல் துறையில் கலாநிதிப்பட்டம் (PhD) பெற்றிருத்தல்

மற்றும்

"கல்வி/ஆய்வு" (AR 1) பிரிவின் பதவிகளுக்கு குறைந்தபட்சம் 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**வயது** : 30 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு அதிகமாகாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வய தெல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத்திட்டம்:** AR 2 - 2025 (ரூபா 133,220 - 10 x 3,600 – ரூபா 169,220)

02. **சட்ட அதிகாரி (பதவி வெற்றிடம் 01) : தகைமைகள் பெற்ற விண்ணப்பதாரிகள்** :

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருக்க வேண்டும். சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் சட்டத் துறையில் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

மேற்குறிப்பிட்ட வெளியக விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது** : 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்சவயதெல்லை பொருந்தாது.
**சம்பள அளவுத்திட்டம்** : MM 1-1 - 2025 (ரூபா 91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - ரூபா 168,240)

03. **ஆய்வு உத்தியோகத்தர் (பதவி வெற்றிடம் 01) :**

**தகைமைகள் : வெளியக விண்ணப்பதாரிகள்** :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல், சட்டம் அல்லது ஊடக வியல் ஆகிய துறைகளிலொன்றில் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல், சட்டம் அல்லது ஊடகவியல் ஆகிய துறைகளில் ஒன்றில் சாதாரண பட்டத்துடன், ஆராய்ச்சிசார்ந்த ஆய்வுகளை உள்ளடக் கிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது** : 22 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு :** AR 1 - 2025 (ரூபா 91,650 - 10 x 2,480 - 15 x 3,450 - ரூபா 168,200)

04. **நிதி உத்தியோகத்தர் (பதவி வெற்றிடம் 01) :**

**தகைமைகள் : வெளிவாரி விண்ணப்பதாரர்கள் : (கீழ் குறிப்பிட்ட தகைமைகள் 1 அல்லது 2 அல்லது 3 இல் ஏதேனும் ஒன்று)**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் அல்லது வணிகக்கல்விப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

02. பதவியுடன் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்தின் (SLICA, ACCA,CIMA,CMA) இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

03. கணக்கியல் அல்லது வணிகக்கல்விப் பட்டம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் மற்றும் அத் தகுதியைப் பெற்ற பின்னர் அரசாங்க, அரசாங்க கூட்டுத்தாபனம், சபை அல்லது சட்டபூர்வ நிறுவனத்தில் குறைந்த பட்சம் 5 வருடகால சேவை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் : (கீழ்க் குறிப்பிட்ட தகைமைகள் 1 அல்லது 2)**

மேலே குறிப்பிடப்பட்ட வெளியக விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

அல்லது

"முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பமற்ற" (MA1) சேவைப் பிரிவின் இரண்டாம் தரத்தில் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தது 5 வருட திருப்திகரமான சேவைக்காலத்தை நிறைவு செய்திருக்க வேண்டும்.

**வயது** : 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர்ந்தபட்ச வயது எல்லை பொருந்தாது.

**சம்பள அளவு :** JM 1-1 - 2025 (ரூபா 72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - ரூபா 122,970)

05. **அபிவிருத்தி உத்தியோகத்தர் (பதவி வெற்றிடங்கள் 04) :**

**தகைமைகள் : வெளியக விண்ணப்பதாரர்கள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது** : 22 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு :** MA 3 - 2025 (ரூபா 53,940 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 5 x 1,350 - ரூபா 94,980)

06. **மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) - (பதவி வெற்றிடம் 01) :**

**தகைமைகள் : வெளிவாரி விண்ணப்பதாரர்கள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தமிழ் மொழி அல்லது ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மற்றும்

பட்டப்படிப்பிற்காக தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள், க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது பட்டப்படிப்பிற்காக ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள், க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியத்திற்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது** : 22 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு :** MA 3 - 2025 (ரூபா 53,940 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 5 x 1,350 - ரூபா 94,980)

07. **முகாமைத்துவ உதவியாளர் (பதவி வெற்றிடம் 01) :**

**தகைமைகள் : வெளிவாரி விண்ணப்பதாரர்கள் :**

(அ) க. பொ. த. (சாதாரண தரப் பரீட்சையில்) :

(i) சிங்களம்/ தமிழ்
(ii) கணிதம்
(iii) ஆங்கிலம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

(ஆ) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் (பொது சாதாரணப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

(இ) பதவிக்குரிய ஏனைய சிறப்புத் தகைமைகள்: அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட, குறைந்தபட்சம் 06 மாத கால கணினித் திறன் தொடர்பான சான்றிதழை கொண்டிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் :**

(அ) ஆரம்பத் தரம் - தொழில்நுட்பமல்லாத, பகுதித் தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப சேவை வகைகளில் பின்வரும் "ஆ", "இ" மற்றும் "ஈ" ஆகிய

தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில்

(i) சிங்களம்/ தமிழ்
(ii) கணிதம்
(iii) ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) சேவையில் நிரந்தர நியமனம் பெற்றிருப்பதுடன், அந்நியமனங்கள் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக, நிரந்தர நியமனத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

குறிப்பு : (I) ஒரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படுவதற்கு முன்னர் ஆற்றிய அல்லது ஒரு பத விக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கான ஒரு நிபந்தனையாக ஆற்றிய பயிற்சிக்காலம், மேலே "ஈ" பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை பெறும் ஐந்து வருட காலப் பகுதிக்குள் கணிக்கப்படமாட்டாது. தற்காலிக/அமய அடிப் படையிலான சேவைக்காலங்களும் ஐந்து வருட சேவைக்காலத்திற்குள் கணிக்கப்படமாட்டாது).

**வயது** : 18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங் களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு :** MA 1-2 - 2025 (ரூபா (46,220 - 10 x 540 - 7 x 630 - 12 x 1,080 - 12 x 1,280 - ரூபா 84,350)

08. **ஆவண உதவியாளர் (பதவி வெற்றிடம் 01) :**

**தகைமைகள் : வெளிவாரி விண்ணப்பதாரர்கள்** :

(அ) க. பொ. த. (சாதாரண தரப் ) பரீட்சையில் :

(i) சிங்களம்/ தமிழ்
(ii) கணிதம்
(iii) ஆங்கில மொழி

ஆகியபாடங்கள்உட்படநான்கு(04)பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் (பொது சாதாரணப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

(இ) பதவிக்குரிய பிற தகைமைகள் : மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப/தொழிற்கல்வி பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, கணினித் திறன்களில் குறைந்தது 06 மாதகால சான்றிதழை பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்** :

ஆரம்பத் தரம் - தொழில்நுட்பம் அல்லாத, பகுதித் தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப சேவை வகைகளில் பின்வரும் "ஆ", "இ" "ஈ" மற்றும் "உ" ஆகிய தகைமைகளைக் கொண்ட ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில்

(i) சிங்களம்/ தமிழ்
(ii) கணிதம்
(iii) ஆங்கிலம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) பதவிக்குரியஏனையசிறப்புத்தகைமைகள்:மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி நிறுவன ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட, குறைந்தபட்சம் 06 மாத கால கணினித் திறன் பற்றிய சான்றிதழ் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) சேவையில் நிரந்தர நியமனம் பெற்றிருப்பதுடன், அந்நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக, நிரந்தர நிய மனத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத் தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(குறிப்பு : (I) ஒரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படுவதற்கு முன்னர் ஆற்றிய அல்லது ஒரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கான ஒரு நிபந்தனையாக ஆற்றிய பயிற்சிக்காலம், மேலே "உ" பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை பெறும் ஐந்து வருட காலப் பகுதிக்குள் கணிக்கப்படமாட்டாது. தற்காலிக/ அமய அடிப் படையிலான சேவைக்காலங்களும் ஐந்து வருட சேவைக்காலத்திற்குள் கணிக்கப்படமாட்டாது).

**வயது** : 18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு :** MA 1-2 - 2025 (ரூபா 46,220 - 10 x 540- 7 x 630 - 12 x 1,080 - 12 x 1,280 - ரூபா 84,350)

**விண்ணப்பிக்கும் முறை :**

விண்ணப்பதாரர்கள் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளுடன் தங்களால் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவை அடங்கிய விண்ணப்பப்பத்திரத்தை, 2026, யூலை 13 ஆந் திகதி பி. ப. 4.00 மணிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்.
தகவலுக்கான உரிமை ஆணைக்குழு,
அறை இலக்கம் 203,
கட்டட இலக்கம் 02,
பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம்,
கொழும்பு 07.

06-323

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தரம் I இன் அலுவலர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை – 2024 (2026)

2015.09.01 ஆந் திகதிய 1930/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பில் இருந்து விசேட வகுப்பிற்கு இணைத்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் கீழ் தரமுயர்த்துவதற்காக நடாத்தப்படும் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2026, ஒற்றோபர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சையை தாமதப்படுத்துவதற்கும் இரத்துச் செய்வதற்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின் கீழ் அரசாங்க நிர்வாகச் செயலாளருக்கு அதிகாரமுண்டு.

விண்ணப்பம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www. doenets.lk இணையத்தளத்தின் “Our Services'' கீழுள்ள “Online Applications – Recruitment Exam/ E.B. Exams” ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) மூலம் மட்டுமே சமர்ப்பிக்கலாம். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை ஏற்பது 2026, யூன் மாதம் 29 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன் 2026, யூலை மாதம் 24 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.

அலுவலர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைத் தங்களது தனிப்பட்ட கோப்பில் சேர்ப்பதற்காக தாபனத் தலைவர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் தாபனத் தலைவரின் மூலம் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றையும் மற்றும் சேவை உறுதிப்படுத்தல் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்புவதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதினால் ஏற்படும் எந்தவொரு பாதகமான நிலைமைகளையும் விண்ணப்பதாரரின் மூலம் பொறுப்பேற்றல் வேண்டும்.

02. 2024.12.31 ஆம் திகதிக்கு

i. இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுதியின் I ஆவது தரத்தில் ஆகக் குறைந்தது (5) வருட முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்து உரிய சம்பள ஏற்றங்கள் (5) இனைப் பெற்றுக் கொண்டுள்ள,

ii. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சபை சுற்றறிக்கைகள் 01/2020 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று தண்டனையொன்றை பெறாத,

iii. மூன்றாம் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியெய்துள்ள, அலுவலர்கள் இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெறு வார்கள்.

03. சம்பளம் வழங்குதல் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்க 10/2025 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் பிரகாரம் இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் (MN-7-2025, 4 ஆம் படிநிலை) ரூபா 75,320.00 - 8 x 1360 - 18 x 1850 - ரூபா 119,500.00 என்பதுடன், அச்சம்பளம் 2027.01.01 ஆம் திகதி முதலே உரித்தாகும். அதுவரை மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை III இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக, அரசாங்க அலுவலர்களுக்கு அரசின் மூலம் அவ்வப்போது வழங்கப் படும் ஏனைய கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

04. இலங்கை தொழில்நுட்பசேவையின் வகுப்பு I இல் இருந்து விசேட வகுப்பிற்கான தரமுயர்வு பின்வரும் வகையில் மேற்கொள்ளப்படும்.

i. இணைத்துக் கொள்ளப்படும் சதவீதங்கள்

மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 40%
சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் 60%

ii. அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 04 ஆகக் காணப்படுமிடத்து மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் வெற்றிடங் கள் நிரப்பப்படும் சதவீதம் 25% ஆகவும் சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் சதவீதம் 75% ஆக இருக்க வேண்டியிருப்பதோடு, அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 03 ஆக இருக்கும் போது மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நிரப்பப்படும் வெற் றிடங்களின் சதவீதம் 33.33% மற்றும் சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் சதவீதம் 66.66% ஆகவும் இருக்க வேண்டும்.

iii. இலங்கை தொழிநுட்ப சேவையின் விசேட தரத்திற்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 04 ஐ விட அதிகமாக இருப்பின், மேற்படி 04.I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும்.

iv. பொது நிருவாக அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் விசேட வகுப்பிற்கு தரமுயர்த்து வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதில் சித்தியடைபவர்கள் அதனுடன் தொடர்பு பட்ட ஏனைய தேவைகளையும் பூரணப்படுத்தப் பட்டதாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு வினால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவினால் தகைமைகள் பரீட்சிக்கப்படும். தேர்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பரீட்சையின் திறமைகளின் ஒழுங்கில் மற்றும் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரீட்சை நடைபெற்ற தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் விசேட வகுப்பிற்கான பதவியேற்றம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படும்.

v. விசேட தரத்திற்கு தரமுயர்த்தலுக்காக மட்டுப் படுத்தப்பட்ட போட்டி பரீட்சையின் முடிவுகள் உரித்தாக்கப்படவேண்டியது 2024 ஆம் வருடத்தில் நடைபெறும் வெற்றிடங்களின் எண்ணிக்கை நிரப்பு வதற்கு மட்டுமாகும்.

vi. இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், இலங்கை தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்தில் 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரை ஒவ்வொரு திணைக்களங்களிலும் மற்றும் அமைச்சுக்களிலும் அவ்வவ் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

05. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் தோற் றுகின்ற ஒவ்வொரு பாடத்திலும் மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய வகையில் தமது ஆளடை யாளத்தை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமான வகையில் முகத்தினை மறைக்காது மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் இருகாதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் கண்டு கொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

06. **விண்ணப்பப் படிவம்:**

i. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரரின் மூலம் நிகழ் நிலையினூடாக சமர்ப்பிக்கப்படும் மென்நகல்கள் செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவம் என திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள தென/ பொறுப்பேற்கப்படவில்லை என முறை மைக்குள் உட்செல்வதற்கு பயன்படுத்தும் கைத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) விலாசத் திற்கு அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட் சைக்காக விண்ணப்பம் செய்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள வழிகாட்டல்களை (Instructions) தரவிறக்கம் செய்க. விண்ணப்பங்களை பூர்த்தி செய்கையில் அவ் வழிகாட்டல்களை கட்டாயமாக பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் நகல் பிரதியொன்றை பெற்றுக் கொண்ட பின்பு அதில் செய்யப்படும் எவ்வித திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக கருதப்பட மாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பபடிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்தின் போது, நிகழ்நிலை முறைமையில் குறிப்பிடப் பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனக் கருதி எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ii. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப் பிட்டுள்ள மொழி மூலத்தில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். இப்பரீட்சைக்காக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து அம் மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளித்தல் வேண்டும்.

iii. விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் அவதானமாக சரியான தகவல்கள் வழங்கப்படல் வேண்டும். இப்பரீட்சைக்குரிய ஒழுங்கு விதிகளின் பிரகாரம், ஏதேனும் பரீட்சார்த்தி யொருவர் தவறான தகவல்களைச் சமர்ப்பித் துள்ளமை கண்டறியப்படின், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் போதோ அல்லது அதற்குப் பின்னரோ ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படலாம்.

iv. பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது நிகழ்நிலை முறைமையில் பெற்றுக் கொடுக்கும் கீழ்வரும் கொடுப்பனவுகள் செலுத்தும் செயன்முறையின் கீழ் மட்டும் செலுத்துதல் செய்யப்படல் வேண்டும்.

❖ எந்தவொரு வங்கியினதும் கடன் அட்டை (Any Bank Credit Card)

❖ இணைய கொடுப்பனவு வசதியுடைய எந்த வொரு வங்கியினதும் பற்று அட்டையின் மூலமும் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

❖ இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை யினூடாக/ Flex இணைப்பினூடாக (Online Banking Method/ Flex App of Bank of Ceylon)

❖ ஏதாவது இலங்கை வங்கியின் கிளையி னூடாகவும் (Any Branch of Bank of Ceylon)

❖ தபால் திணைக்களத்தினது எந்தவொரு தபால் காரியாலயத்தின் மூலமும் (Any Post Office of the Postal Department)

குறிப்பு:

(அ) மேற்கூறப்பட்ட முறையினூடாக பணம் செலுத்தும் முறை தொடர்பில் அறிவுரைகள் இணையத் தளத்தில் உரிய தொழில்நுட்ப அறி வுரைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) பணம் செலுத்தப்பட்டதென குறுஞ் செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் தகவ லொன்றின் மூலம் தெரியப்படுத்தப்படும். பரீட்சை கட்டணத்திற்கான முழுமையான தொகையை செலுத்த வேண்டியதுடன், பரீட்சை கட்டணம் குறைவாகவோ அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட செலுத்துகை முறை மூலம் பரீட்சை கட்டணங்களை செலுத்தும் போது ஏற்படும் குறைகள் தொடர்பில் இலங்கை பரீட்சை திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீள வழங்கப்பட மாட்டாது அல்லது வேறொரு பரீட்சைக்காக மாற்றீடு செய்யப்படமாட்டாது.

07. i. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற பூர்வாங்க கணிப்பின் அடிப்படையில், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய கட்டணத்தைச் செலுத்தி, சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் நிகழ்நிலை மூலம் மாத்திரம் வெளியிடப்படும்.

ii. பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்ட உடன், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் அது தொடர்பாக விபரம் இணையத் தள அறிவித்தல் மூலமாக தனது விண்ணப்ப தாரர்களுக்கு குறுஞ்செய்தி மூலமாக அறிவிக்கப் படும். தனது அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளாத விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை எண் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரித்த கோரிக்கை கடிதத்தை, இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் போது, பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும். அனுமதிப்பத்திரத்தைப் பரிசீலித்து, திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு, விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய உரிய திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்து திருத்தங்களை மேற்கொள்வதற்காகச் செய்யப்படும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

iii. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் பரீட்சார்த்தியின் கையொப்பம் திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர், பரீட்சை மண்டபத்தில் தமக்குரிய இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியுள்ளதுடன், பரீட்சை நடைபெறும் தினத்தன்று தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்க தவறும் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

iv. விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது பதவிக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாகவோ கருதப்படக் கூடாது.

08. மேலே (07) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

09. **பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்** :

இப்பரீட்சையின் பெறுபேறுகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். மாகாண பொதுச் சேவையின் உத்தியோகத்தர்களின் பெறுபேறுகள், உரிய மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர், உரித்தாகும் சேவையைத் திருத்தம் செய்வதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

10. **பரீட்சை நடைமுறைகள் :**

இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.

(i) I ஆம் தரத்திலுள்ள அலுவலர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை 02 வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

(1) உளச்சார்புப் பரீட்சை - நேரம் 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்.

(2) முகாமைத்துவம் - நேரம் 3 மணித்தியாலம் - 100 புள்ளிகள்

தகுதி பெறுவதற்கு ஒவ்வொரு வினாப் பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

முதலாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு

**உளச்சார்பு – பாட இலக்கம் (1)**

தனக்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் சாதாரண செயலாற்றுகை மட்டத்தினைத் தாண்டிய செயற்றிறனைக் கொண்டதாக நிறைவேற்றுவதற்காக தேவைப்படும் அறிவு, ஆற்றல் மற்றும் மனோநிலை என்பவற்றினை பெற்றிருக்கின்றனரா என்றும் அவற்றினைப் பிரயோகித்தலின் போது உச்ச திறமையினைக் காட்டுகின்றனரா எனவும் அளவிட்டுப் பார்க்கும் ஒரு பரீட்சிப்பாகும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடை அளிப்பதற்கான அமைப்பினைக் கொண்ட 50 வினாக்களையுடையதாகக் காணப்படுவதுடன் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

இரண்டாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு

**முகாமைத்துவம் – பாட இலக்கம் (2)**

(i) முகாமைத்துவம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள்
(ii) முகாமைத்துவ தொழிற்பாடுகள்
- திட்டமிடல்
- தீர்மானங்கள் எடுத்தல்
- தீர்மானங்களை எடுக்கும் செயன்முறை
- ஒழுங்கமைப்பு
- பதவிநிலைப்படுத்தல்
- செயற்படுத்துதல்
- ஊக்குவிப்புச் செயன்முறை
- தலைமைத்துவம்
- நிர்வாகம்
- நிர்வாகக் கொள்கைச் செயன்முறை

(iii) பங்குபற்றல் முகாமைத்துவம்
(iv) முகாமைத்துவச் சூழல்
(v) விடய ஆய்வு

இது ஒரு கட்டமைப்பு வினாப்பத்திரமாகும். இதில் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

11. பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளரின் மூலம் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரர்கள் உட்படுவார்கள். அச்சட்டவிதிமுறைகளை மீறின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் மூலம் விதிக்கப்படும் எவ்வகையான தண்டனைக்கு உட்படுவதற்கு நேரிடும். பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

12. இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் காணப்படாத யாதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாக அமையும்.

13. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் யாதேனும் இணக்கப் பாடின்மை காணப்படுமாயின் அப்போது சிங்கள மொழியிலுள்ள வாசகமே செல்லுபடியானதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, யூன் 15.

06-307

---

### அரசாங்க சேவை ஆணைக்குழு

### பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

இலங்கை கட்டிடக்கலைஞர் சேவையின் தரம் III இன் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2025 (2026)

இலங்கை கட்டிடக்கலைஞர் சேவையில் அனுமதிக்கப்பட்ட பதவிகள் நிலவும் அமைச்சுகள். திணைக்களங்கள்/ மாகாண சபைகளில், இலங்கை கட்டிடக்கலைஞர் சேவையின் தரம் III இன் பதவிகளில் நிலவுகின்ற 03 வெற்றிடங்களை நிரப்புவதற்காக, பின்வரும் தகைமைகளைக் கொண்ட அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில், சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கட்டளையின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத் தளத்தின் "Our Services'' கீழுள்ள "Online Applications – Recruitment Exams/ E.B. Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க முடிவது நிகழ்நிலை (Online) மூலம் மட்டுமேயாகும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளும் விண்ணப்பங்கள் 2026 ஆனி மாதம் 29 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு திறக்கப்படும் - அதேவேளையில் 2026, ஆனி மாதம் 24 ஆந் திகதி பி. ப. 21.00 மணிக்கு இறுதி தினமாகும்.

தற்போது அரசாங்க/ மாகாண சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள், விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைத் தமது தனிப்பட்ட ஆவணக் கோப்பில் உள்ளடக்குவ தற்காக தாபனத் தலை வர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப் பத்தில் தாபனத் தலைவரின் மூலம் சான்று படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி யொன்று மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

❖ விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதினால் ஏற்படும் எவ்விதமான பாதகமான நிலைமை களையும் விண்ணப்பதாரரின் மூலம் பொறுப் பேற்றல் வேண்டும்.

01. இப்பரீட்சை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் விதிக்கப்படும் கட்டளைகளுக்கு இணங்க, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026, ஐப்பசி மாதம் கொழும்பில் நடாத்தப்படும். நாட்டிற்குள் ஏற்படக்கூடிய விசேட சூழ்நிலைகளின் அடிப்படையில் மாத்திரம் பரீட்சையை நாடு முழுவதும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இருப்பினும், ஏதேனும் பரீட்சை மத்திய நிலையத்திற்குப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில், அம் மத்திய நிலையத்திற்கு விருப்பம் தெரிவித்துள்ள விண்ணப்பதாரர்கள் வேறொரு பரீட்சை மத்திய நிலையத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுவர். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு இணங்க இப்பரீட்சையை ஒத்திவைப்பதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

இவ் அறிவித்தலில் "நியமன அதிகாரி" எனப் பொருள் கொள்ளப்படுவது அரசாங்க சேவை ஆணைக் குழுவாகும்.

02. **சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் முறை :**

எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேற்றின் அடிப்படையில் இலங்கை கட்டிடக்கலைஞர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்க்கப்படுவது மேற்கொள்ளப்படும்.

எழுத்துப் பரீட்சையில் ஒரு பாடத்திற்காக 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களுள், பரீட்சார்த்திகளின் புள்ளி களின் திறமை ஒழுங்குவரிசையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ள எண்ணிக்கையைப் போன்று, இருமடங்கானவர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப் பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும் புள்ளிகள், எழுத்துப் பரீட்சையில் பெற்ற

புள்ளிகளுடன் கூட்டும் போது பெறப்படும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குவரிசையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

03. **வெற்றிடங்களின் எண்ணிக்கை : 03**

நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளின் பிரகாரம் தீர்மானிக் கப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத சந்தர்ப்பமொன்றில், அவ் எண்ணிக்கையும் திறந்த பிரிவின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

04. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

4.1. அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப் படுத்தும் பொதுவான கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இலக்கம் 1877/28 இனைக் கொண்ட 2014.08.28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கட்டிடக்கலைஞர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கும் உரித்தாகும் பிரகாரம் திணைக்களக் கட்டளைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கும் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதி களுக்கும் (இனி நடைமுறை விதிகள் என அடையாளப்படுத்தப்படும்), மேற்படி நியமங்கள், நிபந்தனைகள், கட்டளைகள், ஏற்பாடுகள், பிரமாணங்கள் மற்றும் விதிகளில் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள அல்லது இனி செய்ய இயன்ற திருத்தங்களுக்கு இணங்க தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் உரிய பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

4.2. இப்பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித் துடையது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசின் மூலம் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு விண்ணப்பதாரர் கட்டுப்படல் வேண்டும். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசின் மூலம் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் வகையில் தங்களால் அதற்கான பங்களிப்புப் பணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

4.3. இந் நியமனமானது ஒரு வருட வேலை பார்க்கும் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும். சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 வருடத்திற்குள் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் முதலாவது வினைத் திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையினை சித்தியடைதல் வேண்டும்.

4.4. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதன் விளைவாந்தன்மையான சுற்றறிக்கைகளின் பிரகாரம் பதவிக்கு உரிய மட்டத்தின் மொழித் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

4.5. நியமனம் பெறுபவர் நாட்டிற்குள் கட்டளையிடப் படும் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

4.6. தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது நியமிக்கப்படும் பதவியொன்றில் அல்லது நியமிக்கப்படும் பிரதேசம் ஒன்றில் கடமையினை பொறுப்பேற்பதற்கு மறுக்கின்ற அல்லது தவிர்க்கின்ற விண்ணப்பதாரர்களின் நியமனத்தினை இரத்துச் செய்வதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

05. **சம்பளக் கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:**

2025.03.25 ஆம் திகதிய இலக்கம் 10/2025 இனைக் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை II இன் பிரகாரம், இப்பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 82,150 - 10 x 2400 - 8 x 2940 – 17 x 3900 - ரூபா 195,970.00 (SL–1–2025) என்பதுடன் அச்சம்பளம் உரித்தாவது 2027.01.01 ஆம் திகதிய லிருந்தாகும். அதுவரை மேற்படி சுற்றறிக் கையின் அட்டவணை III இன் பிரகாரம் சம்பளம் செலுத்தப்படும். இதற்கு மேலதிகமாக, அரசாங்க உத்தி யோகத்தர்களுக்கு அரசின் மூலம் காலத்திற்கு காலம் செலுத்தப்படும் வேறு கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

06. **ஆட்சேர்ப்புத் தகைமைகள்:**

6.1 **கல்வி/ தொழிற் தகைமைகள் மற்றும் வயதெல்லை:**

6.1.1.

I.

i. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற் றறிக்கை இலக்கம் 01/2025 இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிர காரம், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் ஐந்தாண்டு கால கட்டிடக் கலைஞர் விஞ்ஞானமானி பட்டமொன் றினைப் பெற்றிருத்தல் ;

அல்லது

ii. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் மூன்றாண்டு விஞ்ஞானமாணி கட்டிடச் சூழல் தொடர்பான பட்டத்துடன் உரிய துறையில் பட்ட பின்பட்ட டிப்ளோமாவொன்றினைப் பெற் றிருத்தல்;

அல்லது

iii. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மூன்றாண்டு விஞ்ஞானமாணி கட்டிடச் சூழல் தொடர்பான பட்டத்துடன் உரிய துறையில் 05 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்;

மற்றும்

மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்து, அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் 05 வருட செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 இன் MN 2 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளக் குறியீடுகளின் கீழ் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள்

II. இலங்கை கட்டிடக்கலைஞர்கள் நிறுவனத்தில் நிர்ணயிக்கப்பட்ட பாடநெறி - பகுதி 1 இல் சித்தியடைந்த, அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் 10 வருட செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்கள்,

மற்றும்

III. முன்னைய 05 வருடங்களில் திருப்திகரமான சேவைக்காலத்துடன் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட வகுப்பின் வரைபடக் கலைஞர்கள்.

6.2.2 **வயதெல்லை**:- ஏற்புடையதாகாது.

6.2 **ஏனைய தகைமைகள்**:

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
III. இலங்கைக்குள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், தனது பதவியின் பொறுப்புகள் மற்றும் கடமைகளைச் சரியாக நிறைவேற்றுவதற்கு தேவையான போதிய உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
IV. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க ஒழுக்காற்றுத் தண்டனையொன்றினை உட்படுத்தப்பட்டிருத்தல் ஆகாது.
V. சேவையில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
VI. ஆட்சேர்ப்புக்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்திற்கோ அல்லது அதற்கு முன்னர் அனைத்து முறையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

07. **ஆட்சேர்ப்பு முறை**: எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் முடிவுகளின் அடிப்படையில்

7.1 **எழுத்துப் பரீட்சை:** இப் போட்டிப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| *இலக்கம்* | *பாடங்கள்* | *அதிகூடிய புள்ளியின் அளவு* | *சித்திக்குரிய புள்ளியின் அளவு* | *காலம்* |
|---|---|---|---|---|
| 01 | கட்டடக்கலையியல் பாடம்சார் அறிவு | 100 | 40 | 03 மணித்தியாலங்கள் |
| 02 | பொது வினாப்பத்திரம் | 100 | 40 | 02 மணித்தியாலங்கள் |

அனைத்துப் பரீட்சார்த்திகளும் இப் பரீட்சைக்காக உரிய வினாத்தாள்கள் 02 இற்காகவும் தோற்றுதல் வேண்டும்.

**பாட இலக்கம் 01 – கட்டடக்கலையியல் பாடம்சார் அறிவு**

இவ்வினாப்பத்திரம் பின்வரும் பிரகாரம் தயாரிக்கப்படும். காலம் மூன்று மணித்தியாலங்களாகும்.
I மற்றும் II ஆம் பகுதிகளில் கட்டாய வினாக்கள் இரண்டிற்கும் (20 புள்ளிகள் வீதம்) மற்றைய பகுதிகள் மூன்றிலும் 6 வினாக்களில் நான்கிற்கு விடையளித்தல் வேண்டும். (15 புள்ளிகள் வீதம்)

**I ஆம் பகுதி – அரசாங்க சேவையில் கட்டடக்கலைஞரின் பிரயோக வகிபாகம்**

1. அரசாங்க மற்றும் தனியார் துறைகளுக்கிடையில் கட்டடக்கலையியலின் பிரயோக வித்தியாசம்
2. கட்டிடக்கலைஞர் வகிபாக பரப்பின் அநுகூலம் மற்றும் பிரதிகூலங்கள்
3. பொது மக்கள் மீதான பொறுப்புக்கள்
4. அமைப்பின் மீதான பொறுப்புக்கள்

**II ஆம் பகுதி –**

1. அடிப்படை ஆய்வு மற்றும் விமர்சனம்
2. கருதுகோள் அடிப்படையான வடிவமைப்பு மற்றும் அடிப்படை மதிப்பீட்டிற்கான அணுகுமுறை
3. விதிகளைத் திட்டமிடல் மற்றும் கட்டமைத்தலுடன் அவசியப்படும் அங்கீகாரங்கள் மற்றும் விளக்கங் களைப் பெற்றுக்கொள்ளல்
4. குறித்துரைக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங் களின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வ தற்காக தயாரிக்கப்பட வேண்டிய திட்டமிடல் சாதனங்கள்
5. கட்டடக்கலையியலின் விவரமான கள திட்டமிடல் மற்றும் விவரணம்
6. ஏனைய ஆலோசகர்களுடன் (கட்டமைப்பு திட்ட மிடல் மற்றும் சேவைத் திட்டமிடல்) ஒன்றிணைந்து விவரமாக தகவல்களை தயாரித்தல்

**III ஆம் பகுதி – அமைப்பின் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாட்டு ஊடகம்**

1. அமைப்பின் தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு
2. அமைப்பின் வகிபாகம் மற்றும் செயற்பாடுகள்
3. அமைப்பின் கட்டமைப்பு
4. அமைப்பின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது அதன் ஒவ்வோர் துறையின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் உள்ளக தொடர்புகள்
5. ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் காணப்படும் தொடர்புகள்

**IV ஆம் பகுதி – கருத்திட்டத்தின் முன் கட்டுமான காலத்தினுள் கருத்திட்டத்திற்கு கட்டடக்கலைஞரின் பங்களிப்பு**

1. கேள்விமனு ஆவணங்கள் மற்றும் நிறுவன மதிப்பீடு
2. பெறுகை நடவடிக்கை வழிகாட்டுதல்கள்
3. முன் கேள்வி (டென்டர்) கூட்டம் மற்றும் கேள்வி நடவடிக்கைகள்
4. தொழில்நுட்ப மதிப்பீடுகள் மற்றும் கேள்விச் (டென்டர்) சபையின் வகைகள்
5. உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களை கையளித்தல்

**V ஆம் பகுதி – கருத்திட்டம் இயங்கும் செயல்முறையினுள் மற்றும் ஒப்பந்த காலத்தின் பின்னர் கட்டடக்கலைஞர்களின் பங்களிப்பு**

1. வேலைத்தளத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
2. தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகள்
3. நிர்மாணப்பணிக் குழுவுடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்திக்கொள்ளல்
4. மதிப்பீடு செய்தல் மற்றும் பின் பகுப்பாய்வு நடவடிக்கைகள்
5. பராமரிப்புக் கையேடு

**பாட இலக்கம் 02 –பொது வினாப்பத்திரம்**

இவ்வினாப்பத்திரம் 02 மணித்தியாலங்களிற்கு வரையறுக் கப்பட்டுள்ளது. வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

I ஆம் பகுதி : அனைத்துப் படங்களும்/விடயங்களும் உள்ளடங்கும் வகையில் பரந்த விஞ்ஞான விடயங்கள் தொடர்பான வினாக்களைக் கொண்டுள்ளது.

II ஆம் பகுதி : பொருளாதார, அரசியல், கலாச்சார மற்றும் கலை போன்ற ஏனைய சாதாரண விடயங்களுடன் தொடர்பான வினாக்களினையும் உள்ளடக்கியுள்ளது.

**வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு :**

- மேற்படி வினாப்பத்திரத்திலுள்ள வினாக்கள் பல்தேர்வு வினாக்களாகவோ அல்லது அரை கட்டமைக்கப்பட்ட வினாக்களாகவோ அல்லது அவற்றின் சேர்மானங்களாகவோ இருக்க முடியும்.
- சகல வினாக்களிற்கும் விடையளித்தல் வேண்டும்.

7.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை: கட்டமைக் கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் பின்வரும் பிரகாரம் புள்ளிகள் வழங்கப்படும்.

எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப் படையில், ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் புள்ளிகளின் திறமை ஒழுங்குவரிசையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கானவர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, தகைமைகளை

உறுதிப்படுத்துகின்ற விண்ணப்பதாரர்கள் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நேர்முகப்பரீட்சை சபையின் மூலம் பின்வருமாறு புள்ளிகள் வழங்குவது மற்றும் தகைமைகளை பரீட்சித்தல் செய்யப்படும்.

| *பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள்* | *உச்ச புள்ளிகளின் அளவு* | *மொத்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| 1. **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 20 |
| I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொண்ட முதுநிலை மாணிப் பட்டம் | 10 | |
| II. முழுமையான தொழிற் தகைமை | 10 | |
| 2. **மேலதிக தொழிற் தகைமை** | | 20 |
| I. தற்கால சேவைத் துறையிற்கு உரித்துடையதாக முன்வைக்கப் பட்டுள்ள வெளியீடுகள் (அவை வெளியிடப்பட்ட ஊடகங்கள் மற்றும் ISBN இலக்கம் பெறப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தல் வேண்டும் – ஒன்றிற்கு 01 புள்ளி வீதம்) | 05 | |
| II. தற்கால சேவைத்துறையிற்கு உரித்துடைய உள்நாட்டு/வெளி நாட்டு நிறுவனத்தில் வகித்த பதவி (குறித்துரைக்கப்பட்ட சேவைச் சான்றிதழினை முன்வைத்தல் வேண்டும் - ஒன்றிற்கு 01 புள்ளி வீதம்) | 05 | |
| III. தற்கால சேவைத்துறையினுள் பெற்ற விருதுகள் / பாராட்டுக்கள் (பொது 230 மாதிரிப் படிவம் மூலம் அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த முடியும் – (ஒன்றிற்கு 01 புள்ளி வீதம்) | 05 | |
| IV. சேவைத்துறையிற்கு உரித்துடையதாக செய்யப்பட்ட புதிய தயாரிப்பு ( புதிய தயாரிப்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்ட சான்றிதழை முன்வைக்கப்படல் வேண்டும் - (ஒன்றிற்கு 01 புள்ளி வீதம்) | 05 | |

| *பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள்* | *உச்ச புள்ளிகளின் அளவு* | *மொத்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| 3. **தொழிற்துறை அனுபவம்** | | 55 |
| I. தனியான கட்டிடங்கள் தொடர்பான கட்டடக்கலைஞனின் செயற்பாடுகள்<br>- வீடு<br>- பொது அலுவலகம்<br><br>(சதுர அடி 300 இலிருந்து 500 வரையான வீடுகள் மற்றும் அரசின் பொது அலுவலக கட்டிடங்கள்) | 15 | |
| II. அரை அடுக்கு மாடிக் கட்டிடம் தொடர்பான கட்டடக் கலைஞனின் செயற்பாடுகள்<br>- வீடமைப்புத்திட்டங்கள்<br>- கலப்பு அபிவிருத்திக் கட்டிடங்கள் (2 மாடியில் இருந்து 5 வரை) | 10 | |
| III. உயரமான கட்டிடங்கள் தொடர்பான கட்டடக்கலைஞனின் செயற்பாடுகள்<br>- வீடமைப்புத்திட்டங்கள்<br>- கலப்பு அபிவிருத்திக் கட்டிடங்கள்<br>(6 மாடியினை விட அதிகமான அடுக்கு மாடிச் செயற்திட்டங்கள்) | | |
| IV. வாழ்விடம் மற்றும் பிரதான திட்டப்பணிகள்<br>- வீடமைப்புத்திட்டங்கள்<br>- Master Plan (பிரதான திட்டம்)<br>- கலப்பு அபிவிருத்தி செயற்திட்டங்கள் | 10 | |
| V. ஏனையவை<br>- மேலதிக நிர்மாணிப்புக்கள் (உதா: கண்காட்சித்தளம்)<br>- சமூக சேவைப் பங்களிப்பு<br>- Housing Clinic | 10 | |
| - தொழில்சார் தொழிற்துறைக்கு உரிய வேற்று பாட நெறிகள் பயின்றிருத்தல் (உதா: பசுமைக் கட்டிடம்) (குறித்துரைக்கப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்து வதற்காக ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றிதழ்களை முன்வைத்தல் வேண்டும்) | 10 | |
| 4. **நேர்முகப்பரீட்சையில் காட்டும் திறன்கள்** | | 05 |
| மொத்த புள்ளிகள் | | 100 |

7.3 பதவிக்கு உரியதான பிரகாரம், எழுத்துப் பரீட்சையின் மற்றும் நேர்முகப் பரீட்சையின் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறன் ஒழுங்குவரிசையின் அடிப்படையில் பதவிக்காக நியமனம் செய்யப்படும்.

திறமை ஒழுங்குவரிசையின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்பும்போது, ஏதேனும் சந்தர்ப்பத்தில் எஞ்சியுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையிலான தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் சமமான புள்ளிகளைப் பெற்றிருந்து, அவ்வெற்றிடங்களை நிரப்ப வேண்டிய சேவைத் தேவை நிலவுமாயின், அவ்வாறு சமபுள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களில் இருந்து மேலதிக தெரிவொன்றை மேற்கொள்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானிக்கலாம். இந்தத் தெரிவு நடைமுறையானது பின்வருமாறு இரண்டு பகுதிகளைக் கொண்டது.

திறமை ஒழுங்குவரிசையின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்பும் போது, ஏதேனுமாரு சந்தர்ப்பத்தில் எஞ்சியுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குக் கூடுதலான எண்ணிக்கையில் சமமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள, தகைமையுடைய பரீட்சார்த்திகள் இருப்பின் மற்றும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான சேவைகளின் தேவைப்பாடு அச்சந்தர்ப்பத்தின் போது நிலவுமாயின், அவ்வாறு சம புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள பரீட்சார்த்திகளில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களிடையே இருந்து மேலதிகமாக தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படலாம். இத்தெரிவு நடைமுறை பின்வரும்படி இரு பகுதிகளைக் கொண்டதாகும்.

I. பரீட்சார்த்திகளின் திறனை மதிப்பிடலின் பொருட்டான எழுத்து மூலப் பரீட்சை
II. திறமையின் அடிப்படையிலான நேர்முகப் பரீட்சை

எழுத்து மூலப் பரீட்சை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றின் மூலம் நடாத்தப்படும்.

நேர்முகப்பரீட்சை சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் நியமிக்கப்படும்.

இத்தெரிவு நடைமுறையின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் தொடர்பான மேலதிகத் தகவல்கள் www.psc.gov.lk என்னும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இணையப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

முதற் பக்கம் → பதிவிறக்கம் → நடைமுறை → விசேட தெரிவு → நடைமுறை

7.4 பதவிக்காக நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனங்கள் நடைமுறைப்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியின் மூலம் தீர்மானிக்கப்படும். உரிய பதவிக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்றவாறு பெற்றுக் கொண்டுள்ள புள்ளிகளின் ஒழுங்குவரிசையை அடிப்படையாகக் கொண்டு நியமனங்கள் மேற்கொள்ளப்படும். பதவியொன்றில் சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்கு அல்லது வெற்றிடங்களின் பகுதியொன்றை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

7.5 நியமன அதிகாரியினால் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு பொருத்தமான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெறப்பட்ட புள்ளிகள் / மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேற்றுப் பட்டியலை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தினூடாக பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

7.6 பரீட்சை முடிவுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

08. **பரீட்சை நிபந்தனைகள் :**

8.1 பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் மட்டும் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் விரும்பிய ஒரு மொழி மூலத்தில் பரீட்சையின் பொருட்டு தோற்றலாம். பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் பொருட்டு தம்மால் விண்ணப்பிக்கும் பதவிகளுக்குரியதான சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், அதன் பொருட்டு ஒரு மொழி மூலத்தை மட்டும் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சார்த்தியொருவருக்குச் சுய விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

8.2 நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழி மூலம் மட்டும் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை (Online) மூலம் முன்வைக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவமாகத் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக / ஏற்றுக்கொள்ளப்படவில்லை என கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுரைப் பத்திரத்தைப் (Common Instruction) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது, இவ் அறிவுரைகளைக் கண்டிப்புடன் கடைப்பிடிக்கவும்.

நிகழ்நிலையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்று, அங்கு விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் மற்றும் அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில்

பணியாற்றும் விண்ணப்பதாரர்கள், உரியவாறு தாபனத் தலைவரின் சான்றிதழையும் குறித்துக் கொண்டு தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். அச்சான்றுரைப்படுத்தப்பட்ட அச்சிடப் பட்ட பிரதியானது, நேர்முகத் தேர்வுச் சபையினால் அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதி யொன்றைப் பெற்றுக்கொள்வதற்காகப் பின்னர் விடுக்கப்படும் கோரிக்கைகள் கருத்திற்கொள்ளப் படமாட்டாது.

8.3 இப்பரீட்சைக்கான உரிய பரீட்சை கட்டணம் ரூபா 1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, நிகழ்நிலை முறைமையினால் மூலம் வழங்கப்படும் கீழ்வரும் கட்டணம் செலுத்தப்படும் வழிமுறையின் கீழ் மட்டும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கி கடன் அட்டையின் மூலமும் (Any Bank Credit Card)

ii. இணையதளக் கொடுப்பனவு வசதிகள் உள்ள எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the facility of internet transaction)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறையினூடாக/ Flex இணைப்பினூடாக (Online Banking Method/ Flex App of Bank of Ceylon)

iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the bank of Ceylon)

குறிப்பு : மேற்படி முறைகளின் மூலம் கொடுப் பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை தொடர்பான அறிவுரைகள் www.doenets.lk என்னும் இணையதளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுரைகளின் கீழ் வெளியிடப் பட்டுள்ளது. கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதாகக் குறுந்தகவலொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு விதித்துரைக்கப்பட்டுள்ள பணத் தைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது அதிகமாகச் செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது, ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக் கூறமாட்டாது. பரீட்சையின் பொருட்டு செலுத்தப்படும் பணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படுவதற்கு அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றுவதற்கு இயலாது.

8.4 விண்ணப்பதாரர் தம்வசம் வைத்துக் கொள்ளும் விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியில் மற்றும் பரீட்சையின் பொருட்டான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப் படுத்தப்படல் வேண்டும். அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் சேவையாற்றும் விண்ணப்பதாரரொருவர் தமது கையொப்பத்தினை தாபனத் தலைவர் அல்லது அவரால் அதிகார மளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் மூலம் சான்றுப் படுத்திக் கொள்ளல் வேண்டும்.

8.5 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப் படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ்நிலையினூடாக சமர்ப்பித்துள்ள விண் ணப்பதாரர்களிடம் பரீட்சை ஆணையாளரால் நிகழ்நிலையினூடாக மட்டும் பரீட்சை அனுமதிப் பத்திரம் வெளியிடப்படும். விண்ணப்ப தாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்ட உடன் அதனை குறிப்பிட்டு அறிவித்தலொன்றை இலங்கை பரீட்சை திணைக்களத்தின் இணையத்தள அறிவித்த லொன்றின் மூலம் / விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தியினூடாகவும் அறிவிக்கப்படும். தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சாத்தி யொருவர் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்படும்படி அது தொடர்பில் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் தாபன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசத்தினை சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கை கடிதத்தினை இணைய அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பொருத்தமானது. அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்தப்பட்டதன் பின்னர் கிடைத்த பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தினை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்த பற்றுசீட்டினை தம்வசம் வைத்திருப்பதும் பிரயோசனமானதாகும். அனுமதி அட்டையைப் பரீட்சித்து பார்த்து திருத்தங்கள் இருப்பின், நேரகாலத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில்/ நேர்முகப் பரீட்சையில்

திருத்தங்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பு : அனுமதி அட்டையின்றி பரீட்சைகள் மண்டபத்திற்கு உட்செல்வதற்கு இடமளிக்கப் படாது. பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தில் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பதிகாரிக்கு சமர்ப்பிக்கபட வேண்டிய ஆவணமானது, தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டுள்ள அனுமதி அட்டையை மட்டுமேயாகும். பரீட்சார்த்தியொருவருக்குப் பரீட்சை அனுமதி அட்டையொன்று வழங்கப் படுவது, அவர்/அவள் பரீட்சைக்குத் தோற்று வதற்கு அல்லது பதவியொன்றிற்கான தகைமை யொன்றினை பூர்த்தி செய்துள்ளதான அங்கீகரிப் பென கருதுதலாகாது.

8.6 பரீட்சை நடாத்துதல் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படு வார்கள். அவ் சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் மூலம் விடுக்கப்படும் தண்டனைக்கு கீழ்ப்படிவதற்கு அவருக்கு அல்லது அவளுக்கு நேரிடும்.

8.7 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களின் பொருட்டும் பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரி திருப்பதியடையும் வகையில் தமது சுய ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்படும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் மற்றும் மின் தொடர்பாடல் கருவிகளை அணிந் திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டும் மூடியிருக்காதவாறு பரீட்சைகள் மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சைகள் மண்டபத்திற்கு பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. மேலும், பரீட்சைகள் மண்டபத்திற்கு பிரவேசித்த நேரம் தொடக்கம் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாதிருத்தல் வேண்டும்.

09. **தவறான தகவல்கள் வழங்குவதற்கான தண்டனைகள்:**

பரீட்சார்த்தியொருவருக்குத் தகைமைகள் இல்லை எனத் தெரியவருமாயின், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவனது/ அவளது பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும். பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனு மொரு விடயம் தவறானது என தெரிந்து கொண்டு சமர்ப்பித்துள்ளதாகத் தெரியவருமாயின், அவ்வாறு இல்லையெனில் ஏதேனுமொரு முக்கியமான விடயம் அவன்/ அவள் தெரிந்தே மறைத்துள்ளதாக நியமனம் பெற்றுக் கொண்டதன் பின்னர் தெரியவருமாயின் அவனது / அவளது நியமனம் இரத்துச் செய்யப்படும் என்பதுடன், உரிய நியமனத்தின் கீழ் சம்பளம் மற்றும் படிகள் என அரசாங்க/ மாகாண அரசாங்கத்தினால் செலுத்தப் பட்டுள்ள சகல பணமும் அறவிடப்படும்.

10. **பரீட்சை மொழி மூலம் :**

i. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.
ii. பரீட்சைக்குத் தோற்றும் மொழி நியமன மொழியாகக் கருதப்படும்.
iii. பரீட்சார்த்தியொருவர் பரீட்சையின் போது தோற்றும் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் பதில்கள் வழங்குதல் வேண்டும்.
iv. தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்குப் பரீட்சார்த்தியொருவருக்கு இடமளிக்கப்படாது.

11. இங்கு ஏற்பாடுகள் வழங்கப்படாத விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உரித்தானதாகும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ் அறிவித்தலில், மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தமின்மைகள் அல்லது முரண்பாடுகள் உள்ளதாகத் தெரியவருமாயின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள்,
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, யூன் 15.

06-396

## விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் இலங்கை மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் இலங்கை மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடமாகக் காணப்படும் ஐம்பத்தெட்டு (58) பேரை ஆட்சேர்ப்பதற்காக, கீழே 02 இல் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு நடைமுறை :**

மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவைகள் வகையிலான குடியேற்ற உத்தியோகத்தர் பதவியிலுள்ள வெற்றிடங்கள், பின்வரும் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த நபர்களை எழுத்து மூலப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி, அதன் முடிவுகளின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட காணி ஆணையாளர் நாயகத்தினால் நியமனம் வழங்கப்பட்டு வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

02. **தகைமைகள் :**

I. **கல்வித் தகைமைகள் :** உயிரியல் (Biology), இரசாயனவியல் (Chemistry), பௌதிகவியல் (Physics), விவசாய அறிவியல் (Agricultural Science), விவசாய தொழில் நுட்பவியல் (Agro Technology) ஆகிய பாடங்களுள் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (உயர் தர) ப் பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் விசேட (சாதாரண) சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

II. **தொழில்சார் தகைமைகள்** : மூன்றாம் நிலை மற்றும் தொழில்முறைக் கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் இரண்டு வருட கால விவசாய டிப்ளோமாவை (Diploma in Agriculture) பெற்றிருத்தல் வேண்டும்.

III. **உடற் தகைமைகள் :**

இலங்கைக்குள் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் பொருட்டான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளவியல் தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

IV. **ஏனைய தகைமைகள்:**

- விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- சிறந்த நற்பண்புகளைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் அவசியமான அனைத்துத் தகைமைகளும், விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் எல்லா வகையிலும் பூரணமாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

03. **சம்பள அளவு மற்றும் வகை :**
இந்தப் பதவிக்குரிய மாதாந்த ஒருங்கிணைந்த சம்பள விகிதம் : ரூபா 52,250.00 -10×800-11×1190-10×1320-10×1350-100,040.00 சம்பள குறியீட்டு இலக்கம் - MN3 - 2025

04. **வயது எல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதனடிப்படையில் 31.07.2008 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் மற்றும் 31.07.1996 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னர் பிறந்தவர்கள் மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர்.)

05. **சேவை நிபந்தனைகள் :**

I. இந்தப் பதவி நிரந்தரமானது; ஓய்வூதியத் திட்டத்திற்குரியது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு ஏற்ப நியமனம் செய்யப்படும் விண்ணப்ப தாரர்கள் கீழ் படிதல் வேண்டும்.

II. இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் மூன்று வருட (03) தகுதிகாண் காலத்திற்கு (Probationary Period) உட்படுத்தப்படுவர்.

III. அரச கரும மொழிச் சுற்றறிக்கை 18/2020 ஆம் இலக்கத்தின் பிரகாரம் அதனுடன் இணைந்த சுற்றறிக்கைகளின் பிரகாரம், சேவையில் இணைந்து

மூன்று (03) வருடங்களுக்குள், தாம் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரசகரும மொழியிலும் உரிய தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

IV. இலங்கை தொழில்நுட்ப அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் இணைப்பு மொழித் தேவையினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

V. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும் மற்றும் செய்யப்படவுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை, அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவித் தொழில்நுட்ப சேவைகள் வகையிலான குடியேற்ற உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை, திணைக்கள விதிமுறைகள் மற்றும் அரசாங்கத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஏனைய ஒழுங்கு விதிகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

06. **பரீட்சை முறைமை :**

I. இப் பரீட்சையானது காணி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படுவதுடன், அந்நிறுவனத்தின் தலைவரினால் தீர்மானிக்கப்படும் திகதி ஒன்றில் கொழும்பு நகரில் மாத்திரம் பரீட்சை நடாத்தப்படும்.
II. இப் பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.
III. பரீட்சார்த்தி பரீட்சையின் போது தோற்றுகின்ற அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியின் மூலமே விடையளித்தல் வேண்டும்

07. **எழுத்துப் பரீட்சைக்கான பாடத் திட்டம் :**

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடத் திட்டம்* |
|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | பரீட்சார்த்தியின் தர்க்கரீதியான சிந்தனைத் திறன், அவரின் பகுப்பாய்வு சிந்தனைத்திறன் மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் ஆகியவற்றை மதிப்பிடுவதற்கான இவ் வினாத்தாளானது, பல்தேர்வு (MCQ) வினா முறையிலான பொருத்தமான வினாக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும்.<br>( காலம் 01 மணித்தியாலம் – மொத்தப் புள்ளிகள் 100) |
| 2. பாடம் சார்ந்த தொழில் நுட்பப் பரீட்சை | இலங்கையின் காணி உடைமை உரிமை முறைமையும் அதன் பரிணாமமும், இலங்கையின் காணி மறு சீரமைப்பு இயக்கங்கள், இலங்கையின் விவசாயப் பொருளாதாரம் மற்றும் குடியேற்றத் திட்டமிடலும் முகாமைத்துவமும் போன்ற தலைப்புகள் தொடர்பான கட்டமைப்பு வடிவ வினாத்தாளைக் கொண்டதாகும். பின்வரும் விடயங்கள் குறித்து பரீட்சார்த்திகள் அடிப்படை அறிவைக் கொண்டிருப்பார் என்பது தொடர்பில் எதிர்பார்க்கப்படுகிறது:<br>( காலம் 03 மணித்தியாலம் – மொத்தப் புள்ளிகள் 100)<br><br>**I. இலங்கையின் காணி உடைமை உரிமை முறைமை முறையும் அதன் பரிணாமமும்.**<br>- இலங்கையின் காணி உடைமையுரிமை முறை பற்றிய வரலாறு.<br>- ஆவணங்களைப் பதிவு செய்வதன் மூலம் காணி உரிமையை உறுதிப்படுத்தல்.<br>- இலங்கையில் காணி உரிமைகளைப் பதிவு செய்தல். |

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடத் திட்டம்* |
|---|---|
| | II. **இலங்கையின் காணி மறுசீரமைப்பு வியாபாரங்கள்**<br>- பிரித்தானியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தரிசு நிலங்கள் சட்டமும், அதனால் ஏற்பட்ட சமூக மாற்றங்கள்.<br>- 1935 ஆம் ஆண்டில் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் ஆரம்பிக்கப் பட்டமையும் விவசாய மக்களுக்குக் காணி உரிமைகளை வழங்கியமையும்.<br>- 1972 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டம் மற்றும் அதன் மூலம் ஏற்பட்ட காணி மறுசீரமைப்பு.<br>III. **இலங்கையின் விவசாயப் பொருளாதாரம்**<br>- இலங்கையின் விவசாயக் கொள்கைகள்<br>- இலங்கையின் பிரதான உணவுப் பயிர் உற்பத்தியும் உணவுப் பாதுகாப்பும்.<br>- காணி அபிவிருத்தியின் ஊடாகக் காணி அபிவிருத்தியும் பாதுகாப்பும்.<br>- இலங்கையின் தேசிய உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்களிப்பு.<br>- பயிர் பல்வகைப்படுத்தல்.<br>- நீர் முகாமைத்துவம் (நீர் கட்டுப்பாடு).<br>- மண் பாதுகாப்பு.<br>IV. **குடியேற்றத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவமும்**<br>- குடியேற்றத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் பற்றிய அடிப்படை அம்சங்கள்<br>- சமூக பொருளாதாரக் கணிப்பீடுகள் (ஆய்வுகள்)<br>- மீள்குடியேற்றம்<br>- சமூக அபிவிருத்தி<br>- அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி |

08. **நேர்முகப் பரீட்சை** :

எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்ப தாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசைக்கு (புள்ளி விபர வரிசைக்கு) அமைய, ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையிலானோர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், விண்ணப்பதாரிகளின் சான்றிதழ்கள் மற்றும் தகைமைகள் (உடல் தகைமைகள்) பரிசீலனை மாத்திரமே இடம்பெறும்.

09. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூபா. 500.00 ஆகும். இப் பரீட்சைக் கட்டணத்தை "காணி ஆணையாளர் நாயகம், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்" என்ற பெயரில், பத்தரமுல்ல இலங்கை வங்கிக் கிளையிலுள்ள 7042571 ஆம் இலக்கத்தினை உடைய கணக்கில் வைப்பிலிடத்தக்கதாக விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர், நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டிருக்கும் ஏதேனும் ஒரு இலங்கை வங்கி (Bank of Ceylon) கிளையில் செலுத்தப்பட்டு பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை, விண்ணப்பப்பத்திரத்தின் உரிய இடத்தில் கழன்றுவிடாத வகையில் ஒட்ட வேண்டும். இப் பரீட்சைக் கட்டணங்களைத் தவிர வேறு எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன். இப் பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மீளச் செலுத்தப்பட மாட்டாது. பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றை (Photo copy) உங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

10. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 1 முதல் 4 வரையிலான தலைப்புகள் முதலாவது பக்கத்திலும், எஞ்சியவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடக்கப்படும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அது தொடர்பான விபரங்கள் தனது சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப் பத்திரங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் பத்திரங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப் படுதல் வேண்டும். அத்துடன், அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு அமையாத மற்றும் அரை குறையான விண்ணப்பப் பத்திரங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதால், விண்ணப்பப் பத்திரத்தை அனுப்புவதற்கு முன்னர், அது வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கேற்ற வித்தில் அமைந்துள்ளதா என்பது குறித்தும், சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப் பப்பத்திரம் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்தும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது குறித்தும் மீண்டும் அவதானம் செலுத்துதல் வேண்டும். மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை (Photo copy) உங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

(ஆ) இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரம், 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் "காணி ஆணையாளர் நாயகம், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், "மிஹிகத மெதுர", இல. 1200/06, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இத் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

(இ) விண்ணப்பப்பத்திரம் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்க மேல் மூலையில் "காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகையிலான குடியேற்ற உத்தியோகத்தர் பதவியின் தரம் III இற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026" எனத் தெளிவாகக் குறிப்பிடுவது கட்டாயமாகும்.

(ஈ) கையொப்பத்தை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட நபர் ஒருவரினால், விண்ணப்பப் பத்திரத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தற்சமயம் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் கையொப்பங்களை உரிய திணைக்களத் தலைவரால் அல்லது அவர் சார்பாக அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் உத்தியோகத்தர் ஒருவராலும், ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பங்களை ஒரு சமாதான நீதவான் (JP), சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், அரசாங்க சேவையில் நிரந்தர உத்தியோகத்தர் பதவிநிலை (Staff Grade) உத்தியோகத்தர், முப்படைகளின் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் உத்தியோகத்தர்களில் எவரேனும் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்

11. **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் அடிப் படையில், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்குள் அமைந்த, விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பியுள்ள விண் ணப்பதாரிகளுக்கு பரீட்சையை நடாத்தும் நிறுவ னத்தின் தலைவரினால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பி லான அறிவித்தல் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் www.landcom.gov.lk என்ற இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும். தனது

அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின், அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது குறித்து வினவ முடியும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் தங்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை மத்திய நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது நாளிலேயே பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரியிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சை விண்ணப்பதாரர்களின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரியிடம் உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆளடையாள அட்டைகளில் ஏதேனும் ஒன்று மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும் :

i. ஆட் பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;

ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

12. **பரீட்சை முடிவுகள் :**

இந்த அறிவித்தலின் 07 ஆம் பந்தியின் பிரகாரம், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசைக்கு அமைய தயாரிக்கப்பட்ட முடிவுப் பட்டியல், பரீட்சையை நடாத்தும் நிறுவனத்தின் தலைவரினால் காணி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் முடிவுகளைத் தனிப்பட்ட முறையில் அறிவிப்பதற்கு பரீட்சையை நடாத்தும் நிறுவனத்தின் தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டமையானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவி ஒன்றிற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாகக் கருதப்பட மாட்டாது.

14. பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பாக பரீட்சையை நடாத்தும் நிறுவனத்தின் தலைவரினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அவ் விதிமுறைகளை மீறினால், பரீட்சையை நடாத்தும் நிறுவனத்தின் தலைவரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவன் / அவள் உள்ளாக நேரிடும். பரீட்சையின் பெறுபேறுகள் சம்பந்தமாக பரீட்சையை நடாத்தும் நிறுவனத்தின் தலைவரின் தீர்மானமே இறுதியானதாகும்.

15. விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் அவதானமாக துல்லியமான விபரங்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் விதிமுறைகளின் பிரகாரம் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரருக்கு தகைமை இல்லை எனத் தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடாத்தப்படும் காலப்பகுதியிலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பதாரர் தகுதி இரத்துச் செய்யப்படலாம்.

16. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் காணப்படின், அது குறித்து தெளிவுபடுத்துவதற்கும் / தீர்மானம் எடுப்பதற்கும் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

17. இதிலுள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில ஊடக அறிவித்தல்களுக்கு இடையே ஏதேனும் முரண்பாடுகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள ஊடக அறிவித்தலே சரியானதாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

சந்தன ரணவீர ஆரச்சி,
காணி ஆணையாளர் நாயகம்.

காணி ஆணையாளர் திணைக்களம்,
1200/6, மிஹிகத மெதுர,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல,
2026, யூன் 17.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் இலங்கை மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III இற்கான ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

Open Competitive Examination for Recruitment to Grade III of the post of Colonization Officer in Supervisory Management Assistant Technological Service Category of Land Commissioner General`s Department -2026

| |
|---|
| |

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்

விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலின் 06 வது பந்திக்கு அமைய பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்ற முடியாது)

சிங்களம் - 1
தமிழ் - 2 ☐

(தொடர்புடைய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்))

01. பெயர்

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (Mr./Mrs./Miss.):
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உதாரணம் - GUNATHILAKA B.M.I.S
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

1.2 முழுப் பெயர் ( ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்):
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

02. முகவரி:

2.1 நிரந்தர முகவரி: (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்):
..........................................................................................................................................................
..........................................................................................

2.2 நிரந்தர முகவரி : (சிங்களத்தில்/தமிழில்):-
..........................................................................................................................................................
..........................................................................................

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்):-
..........................................................................................................................................................
..........................................................................................

2.4 தொலைபேசி இலக்கம்:- கையடக்கத் தொலைபேசி: ...............................
நிரந்தர தொலைபேசி: ...........................................

03. பால் நிலை: (✓ அடையாளமிடுக)

பெண் ☐ ஆண் ☐

3.1 பிறந்த திகதி:

ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

3.2 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி அன்று வயது:

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

04. விண்ணப்பதாரிக்குரிய நிர்வாக மாவட்டம்:......................................................................

4.1 பிரதேச செயலாளர் பிரிவு:....................................................................................
4.2 கிராம அலுவலர் பிரிவு:....................................................................................

05. கல்வித் தகைமைகள் :

5.1 க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சை
சுட்டெண் (பரீட்சை எண்):............................ வருடம் :...............

| | *பாடம்* | *சித்தி* | | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|---|---|---|
| 01 | | | 06 | | |
| 02 | | | 07 | | |
| 03 | | | 08 | | |
| 04 | | | 09 | | |
| 05 | | | 10 | | |

5.2 க.பொ.த (உயர் தரம்) பரீட்சை: சுட்டெண் (பரீட்சை எண்): .............. வருடம்: .............

| | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |

5.3 தொழில்சார் தகைமைகள் :

| *நிறுவனம்* | *பூர்த்தி செய்த பயின்ற பாடநெறி* | *கால எல்லை* | *சித்தி* | *சான்றிதழ் இலக்கமும் திகதியும்* |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

06. கணினி அறிவு (Computer Literacy):..........................................................................................................................

07. ஏனைய தகைமைகள்:- ……………………………………………………………………………………………

08. நீங்கள் எப்போதாவது, ஏதேனும் ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்களா?
(தொடர்புடைய கூட்டுக்குள் ✓ அடையாளமிடுக.
‘ஆம்’ எனின் விபரங்களை கீழே குறிப்பிடவும்)

ஆம் ☐ இல்லை ☐

..........................................................................................................................................

09. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு விபரங்கள்.

I. கட்டணம் செலுத்திய வங்கி : ................................ கிளை : .........................................
II. செலுத்திய திகதி :.........../...../.........செலுத்தப்பட்ட தொகை : ......................................

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கியின் கட்டண பற்றுச் சீட்டை சேதப்படுத்தாத முறையில் இங்கே ஒட்டவும் |

10. விண்ணப்பதாரரின் பிரகடனம்:

I. இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவை மற்றும் சரியானவை எனப் பிரகடனப்படுத்துகிறேன். இந்த விண்ணப்பப் படிவத்தில் ஏதேனும் ஒரு விபரத்தையோ அல்லது சில விபரங்களையோ பூர்த்தி செய்யாமல் விடுவதால் அல்லது தவறாகப் பூர்த்தி செய்வதால் ஏற்படும் இழப்புகளை ஏற்றுக்கொள்ள நான் உடன்படுகிறேன். மேலும், இந்த அனைத்துப் பகுதிகளும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் பிரகடனப்படுத்துகிறேன். பரீட்சையின் அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட உடன்படுகிறேன். பரீட்சையை நடாத்தும் நிறுவனத் தலைவரினால் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக விதிக்கப்படும் விதிகளுக்கும், பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கீழ் படிவேன் என்றும் பிரகடனப்படுத்துகிறேன்.

II. என்னால் மேற்கொள்ளப்பட்ட இந்த பிரகடனம் பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், இப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும், நியமனம் பெற்றதன் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்பட்டவர் என்பதையும் நான் அறிவேன்.

திகதி : ............................ .................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

11. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதல்:-

இந்த விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் ..................................................................... ஆகிய திரு/திருமதி/செல்வி அவர்களை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்பதோடு, அவர் எனது முன்னிலையில் .................................. ஆம் திகதி அன்று தனது கையொப்பத்தை இட்டார் எனச் சான்று பகர்கின்றேன்.

திகதி :.......................... ....................................

சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :............................................................
பதவி :.............................................................
முகவரி :.............................................................
( பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

12. நிறுவனத் தலைவரின் சான்றிதழ்:

ஆகிய திரு/திருமதி/செல்வி தற்சமயம் இவ்வலுவலகத்தில் கடமையாற்றுகிறார் என்பதையும், அவரது சேவை திருப்த்திகரமானது என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும், இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் அவர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் தற்சமயம் வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சான்றளிக்கின்றேன்.

திகதி :-................................ ........................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

நிறுவனத் தலைவரின் பெயர் : ............................................................

பதவி : .............................................................

முகவரி : .............................................................

(அதிகாரப்பூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்தவும்):

06-399